**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் :SC.No.452/2025**

**வழக்கு சாட்சி PW-10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சோலை நாராயணன் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | கோயம்புத்தூர் | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது டிரைவராக வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் தென்காசி மாவட்டம், சிந்தாமணியில் சீனு என்ற பெயரில் போட்டோ ஸ்டுடியோ வைத்து தொழில் செய்து வந்தேன். கடந்த 22.06.2016 ம் தேதி, அதிகாலை 02.00 மணிக்கு காவலர்கள் சம்பவயிடத்திற்கு என்னை அழைத்து சென்று சம்பவயிடத்தை படம் பிடிக்க சொன்னார்கள். நான் பல கோணங்களில் போட்டோ எடுத்து பிரிண்ட் போட்டு கொடுத்தேன். கம்பு, கல், செங்கல், இருசக்கரவாகனத்தை போட்டு எடுத்து கொடுத்தேன். அதற்கு சம்பளமாக ரூ.150/- பணம் பெற்றுக்கொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். (வழக்கு கோப்புகளில் போட்டோ புகைப்படங்கள் இல்லை. )

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

போட்டோ எடுக்க என்னை புளியங்குடி காவலர் அழைத்தார். நான் பணம் வாங்கி கொண்ட ரசீது கொடுத்தேனா? என்றால் கொடுத்தேன். நான் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போட்டோ எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Saravanan, Junior Asistant முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 11:05:43 +0530